# திராவிட சினிமா 5

**கருத்து மக்களிடம் பற்றிக் கொண்டால் தீயாகப் பரவும் என்பதுபோல, திராவிடக் கொள்கைகளை, சமதர்ம நோக்கங்களை, சமூகநீதிச் சிந்தனைகளைத் திரைத்துறை மூலம் மக்களிடம் கொண்டு சேர்த்தனர் நமது முன்னோடிகள். கல்வியில் முன்னேற்றம் கண்டு கொண்டிருந்த தலைமுறைக்குக் கொள்கை பேசிய கலைவடிவங்கள் பல்கலைக்கழகமாகத் திகழ்ந்தன. அந்த வகையில் திரைப்படம் என்கிற நவீன ஊடகத்தின் மூலம் அரசியல் மாற்றத்துக்கான திருப்புமுனைகளை உருவாக்கின, திராவிடம் பேசிய திரைப்படங்கள். அந்த வரலாற்றை மீண்டும் வாசிக்கத் தருகிறது திராவிட சினிமா.**

படங்கள் உதவி : ஞானம்

■ வீ.மா.ச.சுபகுணராஜன்





# ‘ராஜகுமாரி’யால் பிறந்த ‘கலைஞன்!’

கோவை ஜூபிடரில் கதை வசனகர்த்தாவாகப் பணியாற்றி வந்த கலைஞருக்கு ஓர் அவசரத் தந்தி. ‘அப்பாவின் உடல்நிலை மோசம்’ என. அவசரமாகக் கிளம்பி திருக்குவளை திரும்பினார். அப்பாவின் உடல்நிலை மிகவும் மோசமடைந்திருந்தது. சிலநாட்கள் தங்கி, மருத்துவர்களிடம் அழைத்துச் சென்றார். அப்போது ஏப்ரல் திங்கள் 11-ஆம் நாள் ஜூபிடர் பிக்சர்ஸுக்காக அவர் முதன்முதலாக திரைக்கதை-வசனம் எழுதிய திரைப்படம் **‘ராஜகுமாரி’** திருவாரூரிலும் வெளியாகியிருந்தது.

அப்பா முத்துவேலருக்குப் பார்வை போய்விட்டிருந்தது. ஆனாலும், மகன் எழுதிய திரைப்படத்தைக் காண ஆவல் கொண்டார். கலைஞரும் அப்பாவின் ஆசையை நிறைவேற்ற அவரை திரையரங்குக்கு அழைத்துச் சென்றார். மகன் பெயர் திரையில் **‘கதை-வசனம் உதவி ஆசிரியர் கருணாநிதி’** என மின்னியதைக் காண இயலாத முத்துவேலர், மகனது வசனங்களைக் கேட்டார். மகனது வசனங்களுக்கு எழுந்த கரவொலி கேட்டு மகிழ்ந்தார்.

## விடுபட்ட கலைஞனின் பெயர்

திரைப்படம் முடிந்து ஊருக்குத் திரும்பியதும், பெருமிதமான தந்தை கேட்டார். “அடுத்து என்ன படம் எழுதிக் கொண்டிருக்கிறாய்..?’’ என்று. கலைஞர், “ ‘அபிமன்யு’ என்ற படத்தை எழுதி முடிக்கும் தருவாயில் இருக்கிறேன் அப்பா” என்றார். அய்யா முத்துவேலர், “அதற்குள் நான் என்கதையை முடித்து விடுவேனென நினைக்கிறேன்” என்றார். வேதனையைச் சுமந்தபடி கோவை திரும்பினார் கலைஞர்.

தனது இருபத்து மூன்றாவது வயதில் இரண்டாவது படத்தை எழுதி முடித்தவருக்கு அந்தத் திரைப்படத்தின் ‘டைட்டில் கார்டில்’ அவரது பெயர் முற்றிலுமாக விடப்பட்டிருந்தது ஆத்திரமூட்டியது. எனவே, அன்றைய பிரபல நிறுவனமான ஜூபிடரை விட்டு வெளியேறினார். கலைஞனின் தார்மீக உரிமை மறுக்கப்பட்ட பின் அங்கு எப்படித் தொடர்வார் சுயமரியாதைக்காரர்..?

## ‘ராஜகுமாரி’யின் கதை

மன்னனின் ஒரே மகளான மல்லிகா வேட்டையாடுவதில் விருப்பமானவள். ஒருமுறை தோழிகளுடன் வேட்டைக்குச் செல்லும் போது, அவள் எய்த அம்பு, சுகுமார் எனும் ஓர் அழகான இளைஞனைக் காயப்படுத்துகிறது. காயத்துக்கு மருந்திட்ட இளவரசிக்கும் சுகுமாருக்கும் காதல் மலர்கிறது. அரண்மனைவாசியும், மன்னனின் உறவினனுமான ஆலகாலனுக்கு இளவரசியை மணந்து அரியணையேற ஆசை. மன்னருக்கும் அது விருப்பமே. ஆனால், மல்லிகா, ஆலகாலனை அறவே வெறுக்கிறாள். வேட்டைக்குத் துணையாகச் செல்லும் நல்லானும் அவனது மனைவியும் வேடிக்கையானவர்கள்.

மறுபுறம் ஒரு முரடனும் அவனது தோழன் தடியனும் காடுமேடெல்லாம் தேடியலைந்து ஒரு குகையிலிருந்து மந்திரக் கோலைக் கைப்பற்றுகின்றனர். பூதத்தின் உதவியால் மாளிகை, பொன், பொருள் ஆகியவற்றைப் பெறும் மந்திரவாதிக்கு, அவை கொண்டு வரும் பெண்கள் மீது மட்டும் விருப்பமில்லை. எனவே, பல்வேறு நாடுகளிலும் தனது மந்திரஜாலத்தைக் காட்டியபடி தானே அழகான பெண்ணைக் கண்டடைய அலைகிறான்.

அவனது கண்ணில் இளவரசி மல்லிகா தென்பட, அவளை அடைய முடிவு செய்கிறான். சுகுமாரைக் காண நந்தவனத்துக்கு வருபவளை, தனது மந்திரசக்தியால் ஆகாய மார்க்கமாகக் கவர்ந்து சென்று ஒரு தனித் தீவில் வைத்துக் கொள்கிறான். மல்லிகாவை மனம் மாறச் செய்து, மணந்து கொள்ள விரும்பி பொறுமையாகத் திட்டமிடுகிறான்.

இதற்குள் மகளைக் காணாத தந்தை அவளைத் தேடிக் கண்டு பிடிக்க ஆலகாலனை வேண்டுகிறார். மன்னரின் ஆணையைத் தட்ட முடியாமல், பெரும் கப்பல் படையைத் திரட்டி மல்லிகாவை மீட்கப் புறப்படுகிறான்.

இளவரசியைக் காணாத சுகுமாரும் ஒரு படகோட்டியின் துணையோடு தேடுதல் வேட்டையைத் தொடங்குகிறான். சுகுமாரின் படகு ஒரு சூறாவளியில் மாட்டி ஒரு தீவில் கரை ஒதுங்குகிறது. அதே வேளையில் ஆலகாலனின் பெரும்படையும் மந்திர வாதியின் சூழ்ச்சியான மந்திரவேலையில் கடலில் மூழ்குகிறது. அவனையும் சுகுமாரே மீட்கிறான்.

தீவில் பகு, பகுனி எனும் அண்ணன் தங்கை உதவி கிடைக்கிறது. அவர்கள் ஆலோசனையின் பேரில் போட்டியில் வென்றவர்க்குக் கப்பல் பரிசு என்ற ராணியின் போட்டிப் பந்தயத்தில் ஆலகாலனை சுகுமார் வெல்கிறான். அந்தத் தீவின் ராணி விஷாராணி அவன் மீது மோகம் கொள்கிறாள். அவளது ஆசைக்கிணங்க மறுத்து பகு, பகுனி உதவியோடு பறக்கும் கம்பளத்தில் மந்திரவாதியின் தீவில் நுழைகின்றனர்.

**எம்.ஜி.ஆர். கலைஞருடன் தொடர்ந்த நட்பைப் பேணி அவரது கதை, திரைக்கதை வசனப் பங்களிப்பில் தொடர்ந்து தனக்கான அடையாளத்தை உருவாக்கிக் கொண்டார்.**

பெரும் சாகசச் சண்டைகள் செய்து மந்திரவாதியைத் தோற்கடித்து, மல்லிகாவையும் மீட்டு மந்திரக்கோலையும் கைப்பற்றுகிறான் சுகுமார். ஒளிந்திருக்கும் ஆலகாலன், விஷாராணி உதவியால் மல்லிகாவைக் கவர்ந்து கொண்டு நாடு திரும்புகிறான். அரசவையில் மல்லிகாவும், சுகுமாரும், பகு மற்றும் மந்திரக்கோல் துணையோடு, ‘மல்லிகாவை மீட்டது சுகுமார்தான்’ என ஒப்புக்கொள்ள வைக்கின்றனர். மன்னனின் அறிவிப்புப்படி இளவரசியை மீட்ட சுகுமார் அவளை மணக்கிறான்.

## வெற்றி தந்த வசனங்கள்

இந்தப் படத்தின் மூலக்கதை, ஏ.எஸ்.ஏ. சாமியினதுதான். லண்டனில் படித்தவரான சாமி, ஆங்கிலப்படமான ‘INVISIBLE’ என்ற படத்தை வைத்து, இந்தக் கதையை உருவாக்கியதாகத் தகவல். ஆனால், திரைக்கதை-வசனம் போன்றவற்றை அவரால் தனித்துச் செய்ய முடியவில்லை. எனவேதான், கலைஞர் வரவழைக்கப்படுகிறார். கலைஞரது வசனங்கள் இந்தத் திரைப்படத்தின் வெற்றிக்கு மிக முக்கியமான காரணமாயின.

வசனங்களில் திராவிடச் சித்தாந்த சாய்வும், இயல்புத் தன்மையும் இழைந்தோடின. மன்னரைத் துதி பாடும் ஆலகாலன், அவரது ‘ஆட்சியைப்பற்றி மக்கள் என்ன நினைக்கிறார்கள்’ என்ற கேள்விக்கு “மக்கள் நடப்பது ராமராஜ்யம் என்கிறார்கள் அரசே” என்கிறான். கதாகாலப் பிரசங்கம் செய்பவர் வாய்குழறி “சீதாப்பிராட்டியார் லங்காபுரி இராவணேஸ்வரனை ஆகாய மார்க்கமாகத் தூக்கிக் கொண்டு போனார்’’ என்று சொல்ல, மக்கள் சிரிக்கிறார்கள்.


மல்லிகா, “ராஜகுமாரனைத் தான் மணக்க வேண்டுமென்பது தான் ராஜதர்மம்” என்ற சுகுமாரனின் பேச்சை, “அது பைத்தியக்காரச் சட்டம்” எனக் கேலி செய்கிறாள். சுகுமாரின் தாய், “அரண்மனை வாசிகள் பயங்கர ஜந்துக்கள்’’ என்கிறார். அரண்மனையில் தமிழிசை நிகழ்ச்சியெனப் பேசப்படுகிறது. அதேபோல காதலர்கள் சந்திப்பு மற்றும் மல்லிகா ஆல காலன் மோதல் கவரும் மொழியில் எழுதப்பட்டிருந்தது.

‘ராஜகுமாரி’யின் பெரும் வெற்றி, கலைஞரது திறமையை உலகம் வியந்து பார்க்க வைத்தது. எம்.ஜி.ஆர். கலைஞருடன் தொடர்ந்த நட்பைப் பேணி அவரது கதை, திரைக்கதை வசனப் பங்களிப்பில் தொடர்ந்து தனக்கான அடையாளத்தை உருவாக்கிக் கொண்டார்.

‘ராஜகுமாரி’ படத்தில்தான் எம்.ஜி.ராமச்சந்திரனும் கதாநாயகனாக அறிமுகமானார். திரைப்படத்தில் கே.மாலதி, எஸ்.வி.சுப்பையா, டி.எஸ்.பாலையா, எம்.என்.நம்பியார், எம்.ஆர்.சுவாமிநாதன், தவமணி தேவி, சிவபாக்கியம் புளிமூட்டை ராமசாமி, சாண்டோ சின்னப்பா தேவர் மற்றும் பலர் நடித்திருந்தனர். படத்துக்கு எஸ்.எம்.சுப்பையா இசையமைக்க, பாடல்களை உடுமலை நாராயணகவி எழுதியிருந்தார்.

...படம் விரியும்

---





## ::ப்ளாஷ்பேக்

### மேள தாளத்துடன் வருகை!



மிதுன் சக்கரவர்த்தி

சேலம் மாவட்டம், கொளத்தூர் ஒன்றியத்தில் அமைந்துள்ள கோவிந்தம்பாடி கிராமத்தில் பிரசாரப் பொதுக்கூட்டம் ஒன்று 1984-ஆம் ஆண்டு நடைபெற்றது. அங்கு சுற்றி இருந்த கிராமத்து மக்கள் எல்லாம் முத்தமிழறிஞர் கலைஞர் பேச்சைக் கேட்க மேள தாளத்துடன் வருகை தந்த விதத்தை அன்றைக்கு, கிளைச் செயலாளராக இருந்த என் தந்தை, என்னிடம் சொல்லி சொல்லிச் சிலாகிப்பார். அந்தப் படங்களை எல்லாம் என் தந்தை பத்திரமாகச் சேகரித்தும் வைத்திருந்தார். மேடையில் தலைவர் பேசுகையில், அவர் அருகில் ஆற்காட்டாரும், என் தந்தை மணி அவர்களும் அமர்ந்துள்ளனர். இன்றைக்கு நான் கழகப் பணியாற்ற அந்தப் படங்கள்தான் உந்துசக்தி.

**-ம.மிதுன் சக்கரவர்த்தி, ஒன்றிய செயலாளர், கொளத்தூர் ஒன்றியம், சேலம் மேற்கு மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in



## கழகமே பெருமிதம்!

முத்தமிழறிஞர் கலைஞரைப் போற்றும் பல ஆயிரம் நிகழ்வுகள் பார்க்கவும், கேட்கவும் பகிர்ந்து கொள்ளப்படுகின்றன. ஆனால், அவர் பெருமிதம் கொண்டது கழகத்தின் தலைவராக கிட்டத்தட்ட அரை நூற்றாண்டு காலம் நெருப்பாற்றில் நீந்தி கழகத்தைக் கட்டி காப்பாற்றியதில்தான். அதை அவரே பதிவும் செய்திருக்கிறார்.

‘‘கழகத்தின் தலைவராக 48 ஆண்டுகளில் எத்தனையோ உயர்வு-தாழ்வுகள், மேடு-பள்ளங்கள், வேதனை-சோதனை-சாதனைகள், இழிமொழிகள், பழிச்சொற்கள், புகழ்ச்சிப் பாராட்டுக்கள் என அனைத்தையும் பார்த்துவிட்டேன். ஆனாலும், சின்னஞ்சிறு வயதில், தமிழ்க் கொடி தாங்கி, எத்தகைய எழுச்சி உணர்வுகளோடு பொது வாழ்வில் கால் பதித்தேனோ, அதே உணர்வுகள்தான் இன்றைக்கும் எனது இதயத்தில் நிரம்பி வழிகின்றன” என இறப்பதற்கு இரண்டாண்டுகளுக்கு முன்பே ஒரு நிகழ்ச்சியில் கலைஞர் குறிப்பிட்டார்.

‘பேரறிஞர் அண்ணா அவர்கள் தொடங்கிய ‘திராவிட முன்னேற்றக் கழகம்’ எனும் ஆலமரத்துக்காக, 48 ஆண்டுகள் இரவு-பகல் பாராமல் உழைத்திருக்கிறோம் என்ற பெருமித உணர்வும் எனக்கு ஏற்படுகிறது’’ எனப் பதிவு செய்கிறார். **கழகமே என்றைக்கும் உடன்பிறப்புகளின் பெருமிதம்!**

## கருவூலம்

### யாத்திரைத் தொண்டர்கள்!

**1976-ஆம் ஆண்டு நெருக்கடி நிலையின்போது, கலைஞரைச் சந்திக்கக் கடும் கெடுபிடிகளைக் காட்டியது காவல்துறை. கலைஞரைப் பார்ப்பதற்காக, வெளியூர்களிலிருந்து வாகனங்களில் வரும் தொண்டர்களையும் போலீசார் மிரட்டத் தொடங்கினர். அன்றைய தி.மு.க. தொண்டர்கள் இதற்கெல்லாம் அஞ்சவில்லை. திருப்பதிக்கும் திருத்தணிக்கும் யாத்திரை செல்வது போல வாகனம் பிடித்துக்கொண்டு, குடும்ப உறுப்பினர்கள் சிலரை மொட்டை போடவும் வைத்து, சந்தனம் தடவிய மொட்டைத் தலையுடன் வாகனத்தை சென்னை கோபால புரத்துக்குள் விட்டு கலைஞரைச் சந்தித்து, கழகத்தின் நம்பிக்கையை விதைத்துவிட்டுத்தான் போவார்கள்.**

---

## திராவிடத்தால் வாழ்கிறோம் 115




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131